நேதாஜி ரிலீஸ்

NETHAJI PICTURES CIRCUIT

Sole Proprietor:

S. MUTHIAH CHETTIAR,
Kulipiral, Pudukotah State.

Trichy Office:
No. 1, General Bazar,
TENNUR.

Madura Office:
M. Ve. Vairavan Chettiar,
General Merchant,
4th Lane, Vengalakadai Street.

Imperial Press, Trichy—1889-46—2000

விகட யோகி

எல்லோருக்கும் எதுவும் கிடைக்கக்கூடியது சென்னையில் மூர்மார்க்கெட்தானே! வரதராஜனுக்கும் அங்கு வாஸந்தியின் காதல் கிடைத்ததில் வியப்பில்லை! ஆனால் அது கிடைத்தவிதம் தான் ரசிக்கக்கூடியது.

வரதன், ஐ. ஸி. எஸ். பரீட்சைக்கு தேவையான ஒரு புஸ்தகம் வாங்க மூர்மார்க்கெட் வந்தான். ஒரு கடையில் அந்தப் புத்தகத்தைப் பேரம் பேசி முடித்துக்கொண்டிருக்கும்போது அங்கு **வாஸந்தி** வருகிறாள். அவளுக்கும் அதே புத்தகம் தேவை. இருவரும் ஒரே புத்தகத்துக்குப் போட்டியிடுகிறார்கள். அப்போது ஒரு பையன் வரதனின் மணிபர்ஸைக் கிளப்பிக்கொண்டுபோகிறான். கடைசியில் கடைக்காரன் வரதனுக்கே புத்தகத்தைக் கொடுக்கும் நிலைக்கு வந்துவிடுகிறான். வரதன் புத்தகத்துக்குள்ள கிரயத்தைக் கொடுக்க மணிபர்ஸை எடுக்கும்போது அது அங்கு காணப்படவில்லை. சட்டை, கோட், ஷர்ட் எல்லாப் பைகளிலும் முகத்தில் அசடுவழிய தேடுகிறான். அவன் நிலைகண்டு வாஸந்தி பரிகாசம் செய்துவிட்டு புத்தகத்தைத் தான் பெறுகிறாள்.

மூர்மார்க்கெட் வழக்கமறிந்த ஒரு போலீஸ்காரன் வரதன் பையிலிருந்து பையன் 'பர்ஸை'க் கிளப்புவதைப் பார்த்திருந்து அவனைப் பிடித்துக்கொண்டு வரதனிடம் வருகிறான். போலீஸ்காரன் பர்ஸை வரதனிடம் காட்டி இது உங்களதுதானா என்று கேட்கிறான். வரதன் அது தன் பர்ஸ்தான் என்று சொல்லியும் நம்பிக்கைப்படாமல் அருகில் இருந்த வாஸந்தியையும் கேட்கிறான். அவளும் அது அவர் பர்ஸ்தான் என்று சொல்கிறாள். சந்தர்ப்ப விசேஷமும், அவர்களின் தோற்றமும் அவர்களிருவரும் தம்பதிகள் என்று நம்பும்படி செய்துவிடுகிறது ஜவானை. இருவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைக்கிறான் ஜவான். வாஸந்தி மறுத்தும் பயனில்லை. அங்கு இன்ஸ்பெக்டரும் அவ்விருவரையும் தம்பதிகளென்றே நம்பிவிடுகிறார். வாஸந்தி எவ்வளவு வாதாடியும் இந்தக் காலத்திலே வெளியிலே தன் புருஷனைத் தன் கணவனென்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுவது சகஜம்தான், அதிலும் நீங்கள் நாகரீக தம்பதிகள்தானே பரவாயில்லை என்று கட்டாயப்படுத்தி இருவரிடமும் தம்பதிகள் என்று கையொப்பம் வாங்கிவிடுகிறார் இன்ஸ்பெக்டர்.

இந்த சம்பவம் இருவர் மனதிலும் ஒருவித புயலைக் கிளப்பிவிடுகிறது. வேறு என்ன காதல்தான்! அடிக்கடி சந்தித்து காதல் லீலைகள் புரிகின்றனர்.

இவர்கள் இப்படி இருக்க வரதனின் சகோதரி பானுவின் கணவன் மதனகோபால் இண்டர் நேஷனல் பாங்கின் செக்ரட்டரி. அவர் தன் வேலேயே பெரிதெனக்கொண்டவர். பானுவோ நாகரீகத்தில் மூழ்கியவள். அவள் ஆசைகளேயும் எண்ணங்களேயும் மதனகோபாலால் திருப்திப்படுத்த முடிவதில்லே. ஆபீஸில் வேலே செய்யவிடாமல் பானு அடிக்கடி போனில் கூப்பிட்டுப் பேசிக்கொண்டே இருப்பாள் அதனுல் எவ்வளவோ தமாஷ்கள் நடந்துவிடுகிறது.

இந்த மதனகோபாலிடம் வாஸந்தி டைப்பிஸ்ட்டாக வேலேக்கமருகிருள். வரதராஜன் ஐ. ஸி. எஸ். பரீட்சைக்கு டில்லி சென்றிருந்ததால் அடிக்கடி அவனுக்கு காதல் கடிதங்கள் எழுதுவது அவள் வழக்கம். ஒருநாள் வாஸந்தியின் தகப்பனுர் அவளே 45 வயதான ஒரு ஐ. ஸி. எஸ். காரனுக்கு இரண்டாம் தாரமாகக் கொடுக்க உத்தேசித்திருப்பதைச் சொல்லவே அதனுல் மனமுடைந்த வாஸந்தி சோர்ந்தாற்போல் இருக்கிருள். அதைத் தவறுதலாக அவளுக்கு உடம்பு சௌகரியமில்லே என்று எண்ணிய அவள் தகப்பனுர் பாங்கி செகரட்டரிக்கு ஒரு லீவ் லெட்டர் எழுதுகிருர். வாஸந்தியும் அதற்குமுன்பே அங்குள்ள நிலேமையை விளக்கி வரதனுக்கு ஒரு கடிதமெழுதி (காதல் கடிதம் தான்) புஸ்தகங்களுக்கடியில் வைத்திருந்தாள். லீவ் லெட்டர் எழுதியவர் கவர் இல்லாததால் அதை மடித்து மேஜைமேல் வைத்துவிட்டு கவர் எடுக்க உள்ளே போகிருர். அப்போது லீவ் லெட்டர் பறந்து கீழே விழுந்துவிடுகிறது கவருடன் வந்தவர் கடிதத்தைக் காணுமல் தேட புஸ்தகத்திற்கடியில் இருக்கும் வாஸந்தி வரதராஜனுக்கு எழுதிய காதல் கடிதத்தை தான் எழுதிய லீவ் லெட்டர்தான் என்று எண்ணி கவருள் வைத்து செகரட்டரிக்கு அனுப்பிவிடும்படி வாஸந்தியிடம் கொடுக்கிருர். அவள் அதில் விலாசம் எழுதி பேங்கு செக்ரட்டரிக்கு அனுப்பிவிட்டு தன் காதல் கடிதத்தை காணுது பதைபதைத்துத் தேடும்போது கீழே பறந்துகிடக்கும் லீவ் லெட்டரை தான் எழுதிய கடிதமென்று எண்ணி அவசர அவசரமாக கவர் உள்ளேவைத்து வரதராஜனுக்கு அனுப்பிவிடுகிருள்.

வாஸந்தியின் காதல் கடிதத்தைப் படித்த மதனகோபால் அவள் உண்மையாகவே தன்மீது காதல்கொண்டிருப்பதாக எண்ணி அதற்கு என்ன செய்யலாம் என்று தன் அந்தரங்க ஊழியஞன அப்புப் பிள்ளேயிடம் யோஜனே கேட்கிருர். அந்த பிரகஸ்பதி,

அவர் வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்ட யோகிபோல நடித்தால் அதனுல் பானு மனங்கலங்கி ஊருக்குப் போய்விடுவாளென்றும் பிறகு வாஸந்தியுடன் தாராளமாக காதல் புரியலாமென்றும் யோஜனே சொல்கிருன். அவனும் அதற்கு வேண்டிய உதவிசெய்கிருன். இந்தப் பைத்திய வேஷத்தால் மதனகோபாலுக்கு சரியாக சாப்பாடுகூட இல்லாமல்போகிறது. அனேக தமாஷ்கள் நடக்கின்றன.

ஒரு பெரிய புரொபஸர் "அடாமிக் வாய்ஸ் எஸன்ஸ்" போன்ற அற்புதங்களை சிருஷ்டிக்கப் படாதபாடுபடுகிருர். ஆனுல் அவர் மனைவி மிருதுபாஷிணி அவரை படாதபாடுபடுத்துகிருள்.

திடீரென்று ஒருநாள் ஆயிர ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்று பேப்பரிலெல்லாம் ரகளைப்படுகிறது. பாங்கிகள் அல்லோல கல்லோலப்படுகின்றன. அதில் நமது மதனகோபால் பாங்கும் ஒன்று. பானுவை ஏய்க்க பைத்திய வேஷம், வாஸந்தியை மயக்க யோஜனைகள், ஆயிர ரூபாய் நோட்டு பிரச்னே இவ்வளவும் சேர்ந்து மதனகோபாலை திக்குமுக்காடச் செய்துவிடுகிறது.

அப்போதுதான் மிருதுபாஷிணி தன் தோழி வாஸந்தியிடம், தன் கணவனுல் மாற்ருமல் வைக்கப்பட்டிருந்த 3 ஆயிர ரூபாய் நோட்டுக்களுடன் வருகிருள். அதை மாற்ற என்ன செய்யலாம் என்று யோஜனே கேட்க வாஸந்தி காஷியரிடம் செல்கிருள். அப்போது மிருதுபாஷிணி விளையாட்டாக டைப் அடித்துக்கொண்டிருக்கிருள். தன் சரஸ வார்த்தைகள் பலனளிக்காததைக் கண்ட மதனகோபால் தன் மனதைத் திறந்து ஒரு காதல் கடிதம் எழுதி ஒரு ப்யூனிடம் கொடுத்து அதை அடுத்த அறையில் டைப் அடித்துக்கொண்டிருக்கும் அம்மாளிடம் கொடுக்கும்படி அனுப்புகிருர். அது சர்வஜாக்கிறதையாக மிருதுபாஷிணியிடம் போய்ச் சேருகிறது! கேட்கவேண்டுமா ஏக கலாட்டாதான்!

மதனகோபால் தன் யோகி வேஷத்தைத் தீவிரமாக்கவே, மந்திரவாதிகளும், டாக்டர்களும் கூட ஆரம்பிக்கின்றனர். 'பேமிலி' டாக்டரான ராமானுஜம் இந்தப் பைத்தியம் சீராதென்று சொல்லிவிட்டு பானுவோடு காதல் வார்த்தைகளாடுகிருன். ஆனுல் பானு கோபமடைந்து டாக்டரை வீட்டை விட்டுப் போகும்படி சொல்கிருள். இதை தற்செயலாக கேட்ட மதனகோபால் டாக்டர் பேரில் கோபங்கொண்டு அவரை நையப்புடைக்க, உடனே அவர் மதனகோபாலுக்கு பைத்தியம் முற்றிவிட்டதென்று பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்துவிடுகிருர்.

இதனிடையில் எவ்வளவோ விஷயங்கள் நடந்துவிடுகின்றன. வரதராஜன் ஐ. ஸி. எஸ். பரீட்சையில் பாஸ்செய்து திரும்புகிறான். பழையபடி அவர்கள் காதல் விளையாட்டுகள் ஆரம்பமாகின்றன.

ப்ரொபஸர் தனது முயற்சியில் வெற்றிபெற்று M. K. T. பாகவதர், எம். எஸ்., பேபி சரோஜா போன்றவர்களின் குரலெடுத்துப் பாடுகிறார். (பாகவதரின் புது பாட்டு கேட்க ஒரு அரிய சந்தர்ப்பம்) அந்த உணர்ச்சி வெறியில் அவருக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது.

இந்தசமயத்தில் வாஸந்திக்கு மதனகோபால் எழுதிய காதல் கடிதமொன்று வரதன் கையில் கிடைத்துவிட, அதனால் கோபாவேசம்கொண்ட வரதன் வாஸந்தி வீட்டுக்குப்போய் அவளைக் கண்டபடி திட்டி இழிவாகப் பேசி அவன் காலைப் பிடித்த அவளை உதைத்துத் தள்ளுகிறான். அதைப் பார்த்துக்கொண்டே வந்த அவள் தகப்பனார் வரதராஜனை வீட்டை விட்டு வெளியேறும்படி சொல்கிறார். இப்படி கடிதங்கள் செய்த தவறுகளால் காதலர் பிரிகின்றனர்.

தன் பெண்ணிற்கு நேர்ந்த இந்த அவமானத்தை பாங்க்சேர்மனிடம் வாஸந்தியின் தகப்பனார் போய் முறையிட அவர் அப்புப் பிள்ளையிடமிருந்து முழு விபரமும் அறிந்து லீவ் லெட்டர் காதலனுக்கும், காதல் லெட்டர் மானேஜருக்கும் சேர்ந்ததினால் ஏற்பட்ட விளைவு என்பதை விளக்குகிறார்.

இந்நசமயத்தில் மதனகோபால் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் படும் அவஸ்தைகள் கொஞ்சநஞ்சமல்ல. தான் பைத்தியமல்ல என்று அங்குள்ள ஒவ்வொரு பைத்தியத்தினிடமும் (தெரியாமல்) முறையிட அதனால் நடக்கும் சம்பவங்கள் ரொம்பத் தமாஷாக இருக்கும். கடைசியில் ஒரு வழியாக தப்பித்துக்கொண்டு தன் வீட்டை அடைந்து பானுவிடம் உண்மை முழுதும் சொல்லி தன்னை மன்னிக்கும்படியும், தான் இனி இங்கிருந்தால் போலீசார் தேடுவார்களென்றும் உடனே இருவரும் சிலோன் சென்றுவிட வேண்டுமென்றும் சொல்ல பானுவும் அவருக்கு பெண் வேஷம் அணிவித்து புறப்படத் தயாராகும்போது இன்ஸ்பெக்டர் வந்து விடுகிறார். அவரிடம் பெண் வேஷத்துடனிருக்கும் மதன கோபாலை "இவள் அவருடைய சகோதரி, பைத்தியம்பிடித்த மதனகோபாலை அழைத்துப்போக நேற்றுதான் சிங்கப்பூரிலிருந்து வந்தார்...... இன்று நாங்களிருவரும் சிலோன் செல்லத் தீர்மா

னித்திருக்கிறோம். எங்களை வழியனுப்பவேண்டு"மென்று கேட்டுக் கொள்கிறாள் பானு.

அந்த சமயத்தில் பாங்க் மானேஜிங் டைரக்டர், வாஸந்தி வாஸந்தியின் தகப்பனார் வரதராஜன் எல்லோரும் மதனகோபால் வீட்டிற்கு வருகின்றனர்.

பாங்க் டைரக்டர் சுந்தர ராவ் விஷயத்தை விளக்கி "நன்றாக இருக்கும் மதனகோபால் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அவஸ்தைப்படுகிறார்" என்று சொன்னவுடன் பெண் வேஷத்திலிருக்கும் மதனகோபால் அவளை ஆனந்தத்துடன் கட்டிப்பிடித்துக் கொண்டு கூத்தாடுகிறார்.

சந்தேகங்களும், சிக்கல்களும் விடுவிக்கப்படுகின்றன. வாஸந்திக்கும் வரதராஜனுக்கும் விவாகம் நடக்கிறது.

இரு தம்பதிகளின் வாழ்க்கையும் ஆனந்தமயமாகிறது!

சுபம்! மிகுதியை வெள்ளித்திரையில் கண்டு ஆனந்தியுங்கள்.

பாட்டுகள்

ராகம்:	மதனகோபால்	தாளம்:
ராகமாலிகை	பி. யு. சின்னப்பா	ஆதி

ஜோன்புரி

என்னை அறிந்தேனே — இனி நான்
ஏகாந்தம் ஆனேனே (என்னை)
தன்னை மறந்து தலைகீழாய் நில்லாமல்
என்னை மறந்து உனை நினைந்திட்டபோது (என்னை)

பிலஹரி

மண்ணையும் பெண்ணையும் பொன்னையும் நினைந்து
கண்ணிருந்தும் காணா குருடனாய் அலைந்து (நான்)
பண்ணிய பாபங்கள் பலவும் அகன்று (நான்)
மண்ணில் உன் அருள் ஒளி—மகிமை தனைக்கண்டு (என்னை)

லதாங்கி

தாயுடன் தந்தையும் தாரமும் மக்களும்
சேயமாய் கொண்டவை நிலையல்லவே
பேயுலகாம் இதை பொய் என அறிந்தே
நீயல்லால் நானில்லை எனும் நிலையுணர்ந்தேன் (என்னை)

ராகம் : மதனகோபால் தாளம் :
செஞ்சுருட்டி [பி. யு. சின்னப்பா) ஆதி

உலக வாழ்வு சதமா—அதை நாம்
உறுதி கொள்ளத் தகுமா—சுகமா (உலக)
நிலை இல்லாத அலை நீர்குமிழ் போலே
நீடும் வானவில் மின்னல் போலே (உலக)

தொகையறா

அந்தரத்தில் பறவை என—ஆழியிடைத் தவளை என
அழிக்க வந்த விஞ்ஞான அமைப்போர் பக்கம்
தந்திரத்தால் யந்திரத்தால் சண்டையிடும் புதிய முறைச்
சாதனங்கள் தாக்கும் உயிர்ச்சாவோர் பக்கம்
விந்தைமிகு கண்வேறு கால்வேறு கைவேறாய் வெட்டுண்டு
வீழ்ந்த மக்கள் வேறோர் பக்கம்
சோந்த மனையாட்டி மக்கள் சுற்றமுற்றம் தனையிழந்தோர்
துயரமதைக் காண அந்தோ துக்கம் துக்கம்-துக்கம்.

பாட்டு

பெண்ணொடு மண்ணினை பொன்னை அன்போடு
பேணுவதால் வரும் கேடு
எண்ணத்தின் இச்சையன்றோ—விடுவிடு நீ
ஈசனையே மனம் நாடு—காணும் (உலக)

ராகம் : பானு தாளம் :
தேச் (டி. ஆர். ராஜகுமாரி) ஆதி

கூவுது பார்—கூவுது பார்
கோகிலமே—கூ கூ கூ கூ ஆ ஆ
காதிற் கானந்த கானமிர்தம் (கூவுது)
தாவி தென்றல் வீசுதிங்கே பார்
தன்னை மீறிய இன்பம் தரும் (கூவுது)
மதுரமான மாலை நேரம்
மதுகரங்கள் செய் ரீங்காரம்
மாமலர் வாசம் வீசும் ஹா
மனோரம்யமே ஆனந்தமே
அ காதிற்கானந்த கானமிர்தம் (கூவுது)

இங்கிலீஷ் : பானு ரப்பா :
மெட்டு (டி. ஆர். ராஜகுமாரி) ட்யூன்

பலே சபாஷ்—பலே சபாஷ்
பந்தம் தவிர்ந்துமே பறந்தெங்குமே
திரிந்திங்கு பாடும்
பறவை போல்—பறவை போல்
இன்றெங்கும் ஓடியே வானம்பாடி என
கானம் பாடுவேனே
அவனி மீதிலென்னை
நிகரே யாருமில்லை
லலல்லாலலல் லலல்லாலலல் லலல்லாலலல்லா
ஆசையானேன்—ஆசையானேன்
ஆசையானேன்—ஆசையானேன்
ஐ லவ்—ஐ லவ்
ஒன்லி யூ அண் நோ ஒன் எல்ஸ் கேன் ஐ லவ்

ராகம் : மதனகோபால் தாளம் :
மாண்டு (பி. யு. சின்னப்பா) ஆதி

பஜராம் பஜராம்—போலோ ராம ராம ராம்
ஸீதா ராம ராம்—தாரே நாம நாம நாம் (பஜராம)
பஞ்சதத்வகா சரீர பனாயா—அமர ஆத்ம ஸமஜாயா
பால ஜவானி புடாபா ஆயா—பரிவர்த்தன திக்லாயா (போ)
சங்கராசாரிய புத்தரே பாயே—ராம நாமகி தூன் லகாயே
ஜோஸ மரே முக்தி கோஜாயே—மாதா பிதா ஸுத பாந்தவ நாரீ
ஸ்வாரத்தகி ஸப் துனியா ஸாரீ—ஸாத்ந ஆயே துனியா சேதனதாம் (போலே)
ராமாநுஜ இஸா கபிமே—குச் பேத் நஹிஹை பாயி
ஏக் பிரம்ம வ துனியா பனயி—ஸப் ஜக வியாபக ஷ்யாம்
வியாபக ஹை கன ஷ்யாம் (போலோ)

ராகம் : மதனகோபால் தாளம் :
நாதநாமக்ரியா (பி. யு. சின்னப்பா) ஆதி

அண்ட புவனங் கொண்ட கிட்டை
ஸாதிக்க வரியா முண்ட முழுதும் பட்ட கட்டை
மணித்தேரோடு கண்குகை யானைக் குதிரை ஒட்டை

வைத்தேறி வாழும் சண்டி உடலுமோ லொடலொட்டை
மின்னார்கள் இன்பம்கொண்டு மயங்கி காமவெட்டை
நஞ்சுண்டு சாமிரெண்டு கெட்ட வினைபொய் மட்டை
அவனுக்கந்த தொண்டாசை கால் ரெண்டும்தான் குட்டை
விழிகுருடன் நண்டாளந்த நாளியவர்
நமக்கேன் காண் அந்த சேட்டை
போவோம் குணங்குடிக் கெல்லோரும்

ராகம்:	மதனகோபால்	தாளம்:
நாதநாமக்ரியா	(பி. யு. சின்னப்பா)	ஆதி

நொங்கும் நுரையு மாகப் பொங்கும்
காமக்கட லுள் மூழ்கும பாவியுடலைச்
சாங்கும் சொரி சிறங்கும் நந்நும்
நமகமெனச் சிங்கும் நரம்பும் தோலும் தொங்கும்
மினுமினுப்பும் மங்கும் இல்லந்துறந்த
சிஙகங்களுக் கில்லைங்காணும் பஙகம்
யேனிஉயர்ந்த தஙகமயமாய் நின்றிலங்கும்
அவர்களுக் கன்றோ தஙகும சாயுச்சிய பதம் தங்கும்
அதில் நமக்கு பஙகுதந்து உதவிப் பராபரம் அளிக்கவே (போவோம்)

ராகம்:	வாஸந்தி	தாளம்:
மிஸ்ரமாண்டு	(பி. எஸ் சரோஜா)	ஹெர்வா

அதிர்ஷ்டசாலியே என்னைப்போல் இல்லை வேறே
நாளைக்கே துரையவர்—நாளைக்கே துரை வருவார்
பார் நானே—பார் நானே—இங்கே
கலெக்டர மனைவி ஆகுமேவன்
எனை வந்து பலபேர் காண்பரே (அதிர்ஷ்ட)
ஐ விஸ் அடெண்ட்தி மீட்டிங்
அங்கே நான் தலைமை வகிப்பேன்
சொந்தமாய் உயர்ந்த பங்களா வாங்குவேன்
ரேடியோ கிராமபோன் மை லாவும்

ராகம்:	வாஸந்தி, வரதராஜன், பானு	தாளம்
பஹாடி	(சரோஜா, குமரேசன், ராஜகுமாரி)	தாத்ரா

அன்பே எல்லாம் தருமே
பூவிலே பொய்யிலா
பொய்யிலா புனிதமாம்

(வாஸந்தி பி. எஸ். சரோஜா)

அன்பே எல்லாம் தருமே
யோகமும் போகமும்
சொர்க்கமா லோகமும்

(வரதராஜன், எஸ். எம். குமரேசன்)

அன்பே எல்லாம் தருமே
சாந்தமே ஏகாந்தமே
காந்தமே போலுமே

(பானு டி. ஆர். ராஜகுமாரி)

அன்பே எல்லாம் தருமே
சுகிர்தமாகு மிதே
சோர்விலா சந்தோஷமே! (அன்பே)

ராகம்: சுபபந்துவராளி புரொபஸர் தாளம்: ஆதி

(எம். கே. தியாகராஜ பாகவதரின் உண்மைக் குரல்)

முகுந்தனே நந்தன் மைந்தனே
முரளீ கான பரமானந்தனே (முகுந்தனே)
ஸுகுமார பிருந்தாவனச் சந்த்ரனே
துணை என்னை வந்தாள் யாதவேந்த்ரனே (முகுந்தனே)
தளர் நடைகொள் ராதை குளிர்சோலைதோறும்
தவழ் யமுனை பாயும் தடம்தோறும் நொந்து
தளிர் மேனி வாடி—தளர்ந்துன்னைத் தேடி
தன்னை மறந்துபாட—அவள் எதிரில் வந்த (முகுந்தனே)

விகடயோகி நடிகர்கள்

பி. யு. சின்னப்பா	....	மதனகோபால்
டி. ஆர். ராஜகுமாரி	....	பானு
பி. எஸ். சரோஜா	...	வாஸந்தி
எஸ். எம். குமரேசன்	...	வரதராஜன்
ஆள்வார் குப்புசாமி	...	அப்புபிள்ளை
டி. எஸ். தமயந்தி	...	மிருதுபாஷிணி

தயாரிப்பு:—

மதராஸ் யுனைடெட் ஆர்ட்டிஸ்ட்ஸ் கார்ப்பரேஷன்

ஸ்டுடியோ:-சோபனசலா

டைரக்ஷன்:—கே. சுப்ரமண்யம், பி ஏ, பி. எல்.,